
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்
நவம்பர், 5 - 2010
ஐப்பசி 19
www.kids.noolagam.com

# தீபாவளி

தீபாவளி மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடக்கூடிய தீபத்திருநாள் ஆகும். இருள் நீக்கி ஒளி தரும் தீபம் போல், மனதில் உள்ள இருளை (தீய எண்ணங்கள்) போக்கும் திருநாளே தீபாவளி.

கிருஷ்ண பகவான் நரகாசுரன் என்ற கொடிய அரக்கனை கொன்ற போது, அவன் தான் இறக்கும் தினத்தை மக்கள் கொண்டாட வேண்டும் என்ற விருப்பத்திற்கிணங்க அந்த நாள் தீபாவளி திருநாளாகக் கொண்டாடப்படுகிறது.

www.kids.noolagam.com

தீபாவளி அன்று அதிகாலையில் எழுந்து எண்ணெய் தேய்த்து கங்காக்குளியல் எடுப்பர். பின் இறைவனை வணங்கி, புத்தாடை அணிந்து, வீட்டில் உள்ள மூத்தோரிடம் ஆசி பெறுவர். தீபாவளி அன்று பலவகை பலகாரங்கள் மற்றும் பல்சுவை விருந்து உண்டு மகிழ்வர். சிறுவரும், பெரியவரும் குதூகலத்துடன் பட்டாசு வெடித்து மகிழ்வுடன் தீபாவளியை கொண்டாடுவர். தீபாவளி அனைவருக்கும் இன்பம் பொங்கும் சிறந்த நன்னாள் ஆகும்.

www.kids.noolagam.com

தீபத்தால் ஒளி பிறக்கும்,
ஒளியால் இருள் விலகும்,
இருள் நீங்க வழி பிறக்கும்,
வழி பிறந்தால் வாழ்க்கை செழிக்கும்,
வாழ்க்கை செழித்தால் இன்பம் துளிரும்,
இன்பம் துளிர்ந்தால் மனதில் தூய்மை நிலவும்,
தூய்மை நிலவினால் தீபாவளி சிறக்கும்.

www.kids.noolagam.com

குறிப்பு :-

பட்டாசு வெடிக்கும் போது, கவனத்துடனும், பெரியோர் சொல் கேட்டும் நடந்து கொள்ள வேண்டும்.

# இனிய தீபாவளி

# திருநாள் வாழ்த்துக்கள்!!!

www.kids.noolagam.com